# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

**2010 ஆம் ஆண்டு யூன் மாதம் 18 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி**

*(2010.06.21 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# இலங்கை செமட்ட செத மன்றம் (கூட்டிணைத்தல்)

*(தனியார் உறுப்பினர் சட்டமூலம்)*

**இலங்கை செமட்ட செத மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்**

மொனராகல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார அவர்களால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 8.00** **தபாற் செலவு : 5.00**

**இலங்கை செமட்ட செத மன்றம்**
**(கூட்டிணைத்தல்)**

## இலங்கை செமட்ட செத மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கான தொரு சட்டம்

*முன்னுரை.*

“இலங்கை செமட்ட செத மன்றம்” என அழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான மன்றமொன்று அதன் உறுப்பினர்களால் இணங்கிக்கொள்ளப்பட்ட விதிகளுக்கிணங்க சொல்லப்பட்ட மன்றத்துடன் தொடர்புபட்ட எல்லாக் கருமங்களையும் பயனுற நிறைவேற்றிக் கொண்டுநடாத்தும் நோக்கத்துக்காக இதற்கு முன்னர் இலங்கையில் தாபிக்கப்பட்டுள்ளதாதலாலும் :

அத்துடன், சொல்லப்பட்ட மன்றம் எப்பல்வேறு குறிக்கோள் களுக்காகவும் கருமங்களுக்காகவும் உருவாக்கப்பட்டதோ அப்பல்வேறு குறிக்கோள்களையும் கருமங்களையும் இதுவரை வெற்றிகரமாக நிறைவேற்றியும் கொண்டுநடாத்தியும் வந்துள்ளதாதலாலும், அது கூட்டிணைப்பதற்கு விண்ணப்பித் துள்ளதாதலாலும், அவ்விண்ணப்பத்தை அனுமதித்தல் பொதுமக்கள் நன்மைக்காகவிருக்குமாதலாலும் :

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத் தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம், 2010 ஆம் ஆண்டின்  ஆம் இலக்க, இலங்கை செமட்ட செத மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டம் என எடுத்துக் காட்டப்படலாம்.

*இலங்கை செமட்ட செத மன்றத்தைக் கூட்டிணைத்தல்.*

**2.** இச்சட்டம் தொடங்கும் திகதியிலிருந்தும் அதன்பின்னரும் (இதனகத்துப்பின்னர் “மன்றம்” எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலங்கை செமட்ட செத மன்றத்தின் தற்போதைய உறுப்பினர் களாக உள்ளவர்களும் அல்லது இத்தால் அமைக்கப்படும் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களாக இனிமேல் சேர்த்துக் கொள்ளப்படுபவர்களுமான அத்தகையோரான அத்தனை ஆட்களும் (இதனகத்துப்பின்னர் “கூட்டுத்தாபனம்” எனக் குறிப்பீடு செய்யப்படும்) “இலங்கை செமட்ட செத மன்றம்” என்ற பெயரின்கீழும் மகுடத்தின்கீழும் இடையறாவழியுரிமைகொண்ட ஒரு கூட்டிணைக்கப்பட்ட குழுவாகவிருத்தல் வேண்டும். அத்துடன் அது அப்பெயர்கொண்டு எல்லா நீதிமன்றங்களிலும் வழக்குத்தொடுக்கலாமென்பதுடன் அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம். அத்துடன், பொது இலச்சினையொன்றை வைத்திருக்கவும் பயன்படுத்தவும் விரும்பியாங்கு அதனை மாற்றவும் அதற்கு முழுத்தத்துவமும் அதிகாரமும் உண்டு.

**3.** கூட்டுத்தாபனம் அமைக்கப்படுவதற்கான பொதுக் குறிக்கோள்கள் பின்வருவனவாதல் வேண்டுமென இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது:- கூட்டுத்தாபனத்தின் பொதுக் குறிக்கோள்கள்.

(அ) இலங்கைக் குடியரசின் சகல மாவட்டங்களிலும் வாழும் வறிய குடும்பங்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தல் ;

(ஆ) இக்குடும்பங்களில் உள்ள பிள்ளைகளின் கல்வித் தரத்தை உயர்ந்த மட்டத்தில் பேணுவதற்காக அரசால் நடைமுறைப்படுத்தப்படும் செயற்திட்டங்களுக்கு ஆதரவளித்தல் ;

(இ) இக்குடும்பங்களில் நிதிநிலைமையை மேம்பாடு அடையச் செய்வதன்மூலம் வறுமை ஒழிப்பு செயற்பாட்டுக்கு உதவி செய்தல் ;

(ஈ) இலங்கைக் குடியரசின் சகல மாகாணங்களிலும் சூழல் பாதுகாப்பு செயல்திட்டத்திற்கு ஆதரவளித்தல் ;

(உ) இலங்கைக் குடியரசின் சகல மாகாணங்களிலும் போஷணை, புனருத்தாபன செயற்பாடுகளை செயற்படுத்த ஆதரவளித்தலும் ;

(ஊ) கேந்திரம் அவசியமென கருதும் நிறுவனங்கள், மத, கலாசார அமைப்புக்கள் என்பனவற்றோடு கூட்டிணைந்து செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் ;

(எ) உதவி தேவைப்படும் குறைந்த வருமானம் உள்ள குடும்பங்களில் உள்ள மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள், உபகரணங்கள், உடைகள், கடன் உதவி மற்றும் நிதி உதவிகளை வழங்குவதற்கு உதவியளித்தல் ;

(ஏ) மேற்கூறப்பட்ட குறிக்கோள்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக நிதியமொன்றினை ஸ்தாபித்து அதனை விரிவாக்கல் ; அத்துடன்

(ஐ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்குத் தேவையானவையும் விரும்பத்தக்கவையும், இடைநேர்விளைவானவையுமான வேறு எல்லாச் செயல்களையும் காரியங்களையும் புரிதல் ;

*கூட்டுத்தாபனத்தின் தத்துவங்கள்.*

**4.** இச்சட்டத்தினதும் எழுத்திலான வேறேதேனும் சட்டத்தினதும் ஏற்பாடுகளுக்கமைய –

(அ) கூட்டுத்தாபனத்துக்காக ஏதேனும் அசைவற்ற ஆதனத்தைக்கொள்ளுதல், வைத்திருத்தல், குத்தகைக்குக் கொடுத்தல் அல்லது வாடகைக்கெடுத்தல், ஈடுவைத்தல், அடைமானம் வைத்தல், விற்றல் அத்துடன் கொடுத்து மாற்றல் அல்லது வேறுவகையில் பாராதீனப்படுத்தல், பாரபந்தத்துக்குட்படுத்தல் அல்லது கையுதிர்த்தல் ;

(ஆ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக அல்லது தத்துவங்களைப் பிரயோகிப்பதற்காக அவசியமாக இருக்கக்கூடியவாறான அத்தகைய எல்லா ஒப்பந்தங்களையும் அல்லது உடன்படிக்கைகளையும் நேரடியாகவோ அல்லது கூட்டுத்தாபனத்தினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலர்மூலமோ செய்துகொள்ளுதலும் அல்லது நிறைவேற்றுதலும் ;

(இ) காசாக அல்லது பொருளாகக் கொடைகளையும் நன்கொடைகளையும் அன்பளிப்புகளையும் ஏற்றுக் கொள்ளுதல் ;

(ஈ) கூட்டுத்தாபனம் உகந்ததெனக் கருதும்முறையிலும் அத்தகைய பிணைப்பொறுப்புடனும் கூட்டுத்தாபனத்தின் நோக்கங்களுக்காக பணம் முற்பணமாகக் கொடுத்தலும் அல்லது கடன் கொடுத்தலும், பணம் கடனாகப் பெறுதலும் ;

(உ) கூட்டுத்தாபனத்தின் நிதிகளை முதலீடுசெய்தலும் நம்பிக்கைப்பொறுப்புகளை உருவாக்குதலும் நிருவகித்தலும் ஏதேனும் வங்கியில் நடப்பு வைப்பு அத்துடன் சேமிப்புக்கணக்குகளைப் பேணுதலும் ;

(ஊ) நூல்களையும், சஞ்சிகைகளையும், பருவவிதழ்களையும் ஏனைய இலக்கியங்களையும் வெளியிடுதல் அல்லது வெளியிடுவித்தல் அத்துடன் நூலகங்கள், புத்தகக்கடைகள், அச்சகங்கள் போன்றவற்றைத் தாபித்தலும் பராமரித்தலும் ;

(எ) கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்குத் தேவைப்படும் அலுவலர்களையும் சேவையாளர்களையும் நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல், இடமாற்றுதல், அவர்களின்மீது ஒழுங்காற்றுக் கட்டுப்பாடு பிரயோகித்தல் அத்துடன் அவர்களைப் பதவிநீக்குதலும், அவர்களின் சேவைக்காலத்தையும் நிபந்தனைகளையும் விதந்துரைத்தலும் ; அத்துடன்

(ஏ) பொதுவாக கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களை எய்துவதற்காக இடைநேர்விளைவானதும் விரும்பத் தக்கதுமான ஏனைய எல்லாச் செயல்களையும் புரிதல்.

*கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமை செய்தல்.*

**5**. (1) கூட்டுத்தாபனத்தின் தவிசாளர், துணைத்தவிசாளர், செயலாளர், உபசெயலாளர், பொருளாளர், மற்றும் கூட்டுத் தாபனத்தின் விதிகளுக்கமைய தேர்ந்து எடுக்கப்படும் வேறு ஒன்பது உறுப்பினர்களைக்கொண்டுள்ள முகாமைச்சபை (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) ஒன்றினால் இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் ஆக்கப்பட வேண்டிய கூட்டுத்தாபனத்தின் விதிகளுக்கமைய கூட்டுத்தாபனத்தின் அலுவல்கள் நிருவகிக்கப்படுதல் வேண்டும்.

(2) கூட்டுத்தாபனத்தின் முதலாவது சபையானது இச்சட்டம் தொடங்கும் தேதிக்கு நேர்முந்திய நாளன்று பதவிவகிக்கும் மன்றத்தின் முகாமைச்சபையாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் விதிகள்.*

**6**. (1) காலத்துக்குக்காலம் ஏதேனும் பொதுக்கூட்டத்தில் சமுகமாயிருந்து வாக்களிக்கும் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டுக்குக் குறையாத வாக்குப்பெரும்பான்மைகொண்டு பின்வரும் எல்லா அல்லது ஏதேனும் விடயங்களுக்காக இச்சட்டத்தின் அல்லது எழுத்திலான வேறு சட்டங்களின் ஏற்பாடுகளுக்கு ஒவ்வாதனவாகவிராத விதிகளை ஆக்குதல் கூட்டுத்தாபனத்துக்குச் சட்டமுறையானதாதல் வேண்டும் :-

(அ) உறுப்பினர்களைச் சேர்த்தல், விட்டகல்தல் அல்லது விலக்குதல் ;

(ஆ) பதவிதாங்குநர்களைத் தேர்ந்தெடுத்தல், பதவிதாங்குநர்கள் தமது பதவியிலிருந்து விலகுதல் அல்லது பதவியை வறிதாக்குதல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுதலும், அவர்களின் தத்துவங்களும், கடமைகளும் ;

(இ) சபை உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்தலும், அதன் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும் அத்துடன் சபை உறுப்பினர்களின் பதவிக்காலமும் அத்துடன் சபை உறுப்பினர் வெற்றிடங்களை நிரப்புதலும் ;

(ஈ) கூட்டுத்தாபனத்தின் பல்வேறு அலுவலர்கள், முகவர்கள் அத்துடன் சேவையாளர் என்போரின் தத்துவங்களும், நடத்தையும், கடமைகளும், பணிகளும் ;

(உ) சபையின் கூட்டங்களைக் கூட்டுதலும், நடாத்துதலும், அக்கூட்டங்களில் அவதானிக்கப்படவேண்டிய நடவடிக்கைமுறையும், அத்தகைய கூட்டங்களின் நேரங்களும், இடங்களும், அறிவித்தல்களும், நிகழ்ச்சிநிரல்களும் அதற்கான கூட்டநடப்பெண்ணும் அதில் கருமமாற்றுதலும் ;

(ஊ) கூட்டுத்தாபனத்தின் ஆதனத்தை நிருவகித்தலும், முகாமைசெய்தலும் ; அத்துடன்

(எ) பொதுவாகக் கூட்டுத்தாபனத்தின் அலுவல்களை முகாமைசெய்வதற்கும், அதன் குறிக்கோள்களை நிறைவேற்றுவதற்கும்.

(2) கூட்டுத்தாபனத்தினால் ஆக்கப்பட்ட ஏதேனும் விதியானது (1) ஆம் உட்பிரிவின்கீழ் விதியொன்று ஆக்கப்படுவதை போன்ற அதேமுறையில் திருத்தப்படலாம், மாற்றப்படலாம் அதற்கு எதுவும் சேர்க்கப்படலாம் அல்லது இல்லாதொழிக்கப்படலாம்.

(3) கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்கள் கூட்டுத்தாபனத்தின் அப்போதைக்கு வலுவிலுள்ள விதிகளுக்கமைந்தொழுகுதல் வேண்டும்.

**7.** கூட்டுத்தாபனத்தின் இலச்சினையானது தவிசாளர், அத்துடன் செயலாளர் அல்லது பொருளாளர் முன்னிலையிலன்றி எத்தகையதுமான சாசனம் எதிலும் பொறிக்கப்படுதல் ஆகாதென்பதுடன், அவர்கள் தாம் சமுகமாயிருந்தமைக்கச் சான்றாக அச்சாசனத்தில் அவர்களது பெயர்களை எழுதி கையொப்பமிடுதல் வேண்டும். அப்படி கையொப்பமிடுதல் எவரேனும் ஆள் சாட்சியாகக் கையொப்பமிடுவதினின்றும் தனிவேறானதாதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் இலச்சினை.*

**8.** இச்சட்டம் நடைமுறைக்குவரும் திகதிக்கு நேர்முந்திய நாளன்று மன்றத்தின் எல்லாக் கடன்களும் பொறுப்புக்களும் இதனால் அமைத்துருவாக்கப்பட்ட கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்படுதல் வேண்டுமென்பதுடன் அந்நாளன்று மன்றத்திற்கு வருமதியாகவுள்ள எல்லாக் கடன்களும் செலுத்தப்படுதற்குரிய ஒப்பப் பணங்கள், உதவுதொகைகள் ஆகியனவும் இச்சட்டத்தின் நோக்கங்களிற்காகக் கூட்டுத்தாபனத்துக்குச் செலுத்தப்படுதலும் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தினால் செலுத்தப்படவுள்ளனவும் கூட்டுத்தாபனத்திற்குச் செலுத்தப்படவுள்ளனவுமான கடன்கள்.*

**9.** (1) கூட்டுத்தாபனம் அதன் சொந்த நிதியத்தைக் கொண்டிருத்தல் வேண்டும். கூட்டுத்தாபனத்துக்காக அல்லது அதன் கணக்கால் கொடை, அன்பளிப்பு, நன்கொடை, ஒப்பப் பணம், உதவுதொகை, கட்டணங்கள் அல்லது மானியக்கொடைகள் ஆதனம், இதுவரை பெறப்பட்ட அல்லது இனிமேல் பெறப்படும் பணங்கள் யாவும் சபை தீர்மானிக்கக்கூடியவாறான ஒரு வங்கியில் அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட வங்கிகளில் கூட்டுத்தாபனத்தின் வரவுக்கு வைப்பிலிடப்படுதல் வேண்டும்.

*கூட்டுத்தாபனத்தின் நிதியம்.*

(2) கூட்டுத்தாபனம் இச்சட்டத்தின்கீழ் அதன் தத்துவங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரயோகிப்பதிலும், புரிவதிலும் நிறைவேற்றுவதிலும் கூட்டுத்தாபனத்தால் உறப்பட்ட ஏதேனும் செலவினத்தை கொடுத்துத்தீர்ப்பதற்கு தேவைப்படுத்தப்பட்ட எல்லா பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

**10.** (1) கூட்டுத்தாபனத்தின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

*கணக்குகளும் கணக்காய்வும்.*

(2) கூட்டுத்தாபனமானது அதன் வருமானம் மற்றும் செலவினம், சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் கூட்டுத்தாபனத்தின் மற்றெல்லாக் கொடுக்கல்வாங்கல்கள் பற்றிய முறையான கணக்குகளை வைத்திருக்கச் செய்தல் வேண்டும்.

(3) கூட்டுத்தாபனத்தின் கணக்குகள் தகைமைபெற்ற கணக்காய்வாளரினால் கணக்காய்வு செய்யப்படுதல் வேண்டும்.

இப்பிரிவில் "தகைமைபெற்ற கணக்காய்வாளர்" என்பது –

(அ) இலங்கைப் பட்டயக்கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினராகவுள்ள அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும் அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில்புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவுள்ள தனியாள் ஒருவர் ; அல்லது

(ஆ) கணக்காளர் குழுமமொன்றில் வதியும் பங்காளர் ஒவ்வொருவரும் இலங்கைப் பட்டயக் கணக்காளர் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராக அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினரொருவராகவும், அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் கணக்காளர் ஒருவராகத் தொழில் புரிவதற்காக வழங்கப்பட்ட சான்றிதழொன்றைக் கொண்டவராகவும் இருக்கின்றதான கணக்காளர் குழுமம் ஒன்று,

என்று பொருள்படும்.

**11.** கூட்டுத்தாபனம் கலைக்கப்பட்டதன்மேல், அதாவது எல்லாக் கடன்களையும், பொறுப்புக்களையும் திருப்திசெய்ததன் பின்னர் எத்தன்மைத்தானதுமான ஏதேனும் ஆதனம் எஞ்சியிருப்பின், அத்தகைய ஆதனம் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படலாகாது. ஆனால், கூட்டுத்தாபனத்தின் குறிக்கோள்களையொத்த குறிக்கோள்களைக் கொண்டதும் அல்லது கொண்டவையும் அத்துடன் எந்த நிறுவகம் அல்லது நிறுவகங்கள் அதன் அல்லது அவற்றின் உறுப்பினர்

கலைக்கப்பட்டதன்மீது எஞ்சியிருப்பதான ஆதனம்.

களிடையே ஏதேனும் வருமானத்தை அல்லது ஆதனத்தைப் பகிர்ந்தளிப்பதிலிருந்து அதன் அல்லது அவற்றின் விதிகளினால் தடைசெய்யப்பட்டுள்ளதோ அல்லது தடைசெய்யப்பட்டுள்ள னவோ அந்த வேறேதும் நிறுவகமாக அல்லது நிறுவகங்களாக இருப்பதும் அல்லது இருப்பவையுமான வேறேதேனும் நிறுவகத்திற்கு அல்லது நிறுவகங்களிற்கு கொடுக்கப்படுதல் அல்லது கைமாற்றப்படுதல் வேண்டும். கூட்டுத்தாபனத்தின் கலைப்பின்போது அல்லது கலைப்பிற்கு முன்னர் அத்தகைய நிறுவகம் அல்லது நிறுவகங்கள் கூட்டுத்தாபனத்தின் உறுப்பினர் களால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும்.

குடியரசினதும் மறுபேரினதும் உரிமைகளைப் பேணல்.

**12.** இச்சட்டத்தில் அடங்கியுள்ளதெதுவும் குடியரசின் உரிமைகளையேனும், ஏதேனும் கூட்டிணைக்கப்பட்ட குழுவின் உரிமைகளையேனும் எவரேனும் ஆட்களின் உரிமையையேனும் பங்கப்படுத்தலோ அல்லது பாதித்தலோ ஆகாது.

ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**13.** இச்சட்டத்தில் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பாராளுமன்றத்தின் சட்டமூலங்களினதும் சட்டங்களினதும் தமிழ்ப் பிரதிகளின் வருடாந்த சந்தா (உள்நாடு) ரூபா 1,387 : (வெளிநாடு) ரூபா 1,849 : ஒவ்வோராண்டும் திசெம்பர் மாதம் 15 ஆந் தேதிக்கு முன் எதிர்வரும் ஆண்டுக்கான சந்தாப்பணம் அத்தியட்சகர், அரசாங்க வெளியீட்டலுவலகம், அரசாங்க தகவல் திணைக்களம், இல. 163, கிருலபனை மாவத்தை, பொல்ஹேன்கொடை, கொழும்பு 05 என்ற விலாசத்திற்கு அனுப்பப்பட வேண்டும்